## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி
## OS. 1/2014 . நாள்.16.11.2024

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | குமரேசன் | **வயது** | 58 |
| **த/பெ. க/பெ.** | தனபால் | **மதம்** | |
| **முகவரி** | கண்ணுகானூர் | **தொழில்** | |

**பிசா.2 ஆஜர். வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் எனது உறவினர்கள் கிடையாது. பக்கத்து நிலத்துகாரர்கள் ஆவார்கள். பக்தவச்சலத்தின் தகப்பனார் பெயர் கோவிந்தசாமி நாயுடு ஆகும். தாயார் பெயர் கமலம்மா ஆகும். நான் கண்ணுகானூர் கிராமத்தில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். பக்தவச்சலம் திருப்பத்தூர் வட்டம், நெல்லாத்துப்பட்டி கிராமத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது எங்கள் கிராமத்தில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். பக்தவச்சலத்தின் தகப்பனார் நெல்லாத்துப்பட்டியில் உள்ள சொத்துக்களை விற்றுவிட்டு வந்து தாவா சொத்துக்களை வாங்கினார்கள் என்றால் சரிதான். பக்தவச்சலத்துடன் உடன் பிறந்தவர் சரசு ஆவார். பக்தவச்சலமும், அவரது பெற்றோர்களும் வழக்கு சொத்துக்களை கூட்டு குடும்ப சொத்துக்களாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பக்தவச்சலத்தின் பெற்றோர் பக்தவச்சலத்திற்க்கும் அவரது பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் பக்தவச்சலத்திற்க்கு கொடுத்துவிட்டார்கள். வழக்கு சொத்துக்களை பக்தவச்சலமும், வாதிகளும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளும், கூட்டு குடும்ப சொத்துக்களாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் திருமணம் ஆனவுடன் அவர்கள் சென்றுவிட்டார்கள். 2013 ஆம் வருடம் வழக்கு சொத்தில் வாதிகள் பக்தவச்சலத்திடம் பாகம் கேட்டார்கள் என்றால் சரிதான். அப்போது வழக்கு சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்ததால் வாதிகளுக்கும், பக்தவச்சலம் மூர்த்தி, ரம்யா ஆகியோர்களுக்கும் பிரச்சனை ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால்

சரிதான். தாவா சொத்துக்களை வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் 2-ம் பிரதிவாதி மூர்த்தி தான் அனுபவம் செய்து வருகிறார். மூர்த்தி அழைத்ததின் பெயரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. தற்போதும் வழக்கு சொத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருக்கிறது என்றும் மூர்த்தி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க அவரது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பிரச்சனை ஏற்படும்வரை வாதிகளும், பக்தவச்சலம் மூர்த்தி, ரம்யா ஆகியோர் ஒன்றாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் திருமணம் ஆன பிறகு சென்றுவிட்டார்கள். தேங்காய் எடுத்துபோவார்கள். மற்ற பொருட்களை எடுத்து போவார்களா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் மூல ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நான் சாட்சி கையெழுத்து போட்ட ஆவணங்களை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தார்கள் என்றும், மூர்த்தி சாட்சி கையெழுத்து போட சொன்னதால் போட்டேன் என்று சொன்னால் சரிதான் அதை படித்து காண்பித்தார்கள் அதற்க்கு பிறகு கையெழுத்து செய்தேன். நான் 2 கையெழுத்துக்கள் செய்தேன். வேறு கையெழுத்துக்கள் செய்யவில்லை. முதல் விசாரணையில் கண்ட சங்கதிகளை வழக்கறிஞரிடம் மூர்த்தி தான் கூறினார். 2,3 பிரதிவாதிகள் பெயரில் தானப்பத்திரம் மோசடியாக தயார் செய்து வைத்திருந்தார்கள் என்றும், மூர்த்தி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க அதற்க்கு சாட்சியாக கையொப்பம் செய்து அதற்க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியது போல் வாதிகள் மேற்படி ஆவணங்களில் சாட்சி கையெழுத்து எதுவும்

போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அது மூர்த்தியால் மோசடியாக போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.